**வீதித்துறை உதவிச் செயற்திட்டம் - 2016**

---

வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 சனவரி 16 ஆந் திகதிய 4138–சீஈ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01 (பீ)(i) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சான தற்போதைய வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வினைத்திறனான தேசிய வீதி முறைமையின் நிலைத்துநிற்கவல்ல விநியோகத்தின் ஊடாக போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. ஆரம்ப அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 69.10 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆக உள்ளதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 யூன் 23 ஆந் திகதிய இலக்க முதலாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 11,579 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 59.60 மில்லியன் (ஐ.அ.டொலர் 98.1 மில்லியன்) ஆன மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2011 மார்ச் 15 இல் இரண்டாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் அதன் மீது ரூபா 11,081 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 63.6 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆன மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2006 சனவரி 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. மேலும், செயற்திட்டக் காலமானது 2015 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்த்தின் செயற்பாடுகள் தொடரப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் அபிவிருத்திக் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

(ஒ) அபிவிருத்தி கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது அபிவிருத்திக் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததென்றும்,

(ஈ) அபிவிருத்திக் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதியாக காணப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் விஷேட கடன் திட்டத்தின் கீழாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 7.64 மில்லியன் தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப்பொறுப்பின் கீழ் காட்டுவதற்கு பதிலாக நிதி மூலங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மொத்தமாக ரூபா 4.27 மில்லியன் கொடுப்பனவின் உண்மைத்தன்மையை நிருபிக்க ஏற்றுக்கொள்ளப்படகூடிய ஆவனச்சான்று இல்லாமல் ஒப்பந்ததாரரிற்கு செலுத்தவேண்டியதாக நிதிக்கூற்றக்களில் காட்டப்பட்டிருந்தது.

**3. நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | அபிவிருத்தி கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொமி ல்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ஐ.அ.டொமி ல்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொமி ல்லியன் | ரூபா மில்லியன் |
| சர்தேச அபிவிருத்திச் சங்க கடன் | | | | | | | |
| 4138 சீஈ | 100.00 | 10,125 | - | - | - | 68.37 | 9,709 |
| 4429 சீஈ | 98.10 | 11,579 | - | - | - | 76.84 | 10,912 |
| 4906 சீஈ | 100.00 | 11,081 | - | - | - | 62.01 | 9,326 |
| இலங்கை அரசாங்கம் | - | - | 48.97 | 0.33 | 48.97 | 49.33 | 7,061 |
| | 298.10 | 32,785 | 48.97 | 0.33 | 10.71 | 267.61 | 37,008 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 02 மாகாணங்களிலுள்ள தேசிய வீதிகளின் 620 கிலோமீற்றர்கள் மற்றும் 03 மாகாணசபைகள் மற்றும் 09 பிரதேச சபைகளின் கண்காணிப்பின் கீழான மாகாண மற்றும் கிராமிய வீதிகளின் 635 கிலோமீற்றர்கள் என்பவற்றின் புனர்நிர்மானம் மற்றும் பராமரிப்பு வேலைகள் செயற்திட்டத்தினால் அமுல்படுத்த எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய வீதிகளின் 685 கிலோமீற்றர்கள் மற்றும் மாகாண மற்றும் கிராமிய வீதிகளின் 162 கிலோமீற்றர்கள் போன்றவற்றின் புனர்நிர்மான வேலைகள் 2015 ஜூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.செயற்திட்டத்தினால் செய்யப்படட பெலியகொட – புத்தளம் வீதி மற்றும் கொழும்பு - காலி - ஹம்பாந்தோட்ட வீதி ஆகியவற்றின் 04 பகுதிகளின் புனர்நிர்மான வேலைகள் மற்றும் பானந்துர நகரத்திலுள்ள மேம்பாலத்தின் நிர்மான வேலைகள் என்பன பூர்த்தியாக்க எதிர்பார்க்கப்பட்ட திகதிகளிலிருந்து 56 நாட்கள் தொடக்கம் 359 நாட்கள் வரையான வீச்சிலான தாமதத்துடன் 2015 ஜூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேலையின் நம்பத்தகாத வேலைப்பரப்பு காரணமாக, ரூபா 396 மில்லியன் கிரயத்தில் அளவைப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த உருப்படிகள் நள்லுருவ விற்கான குறுக்கு சந்தியிலிருந்து கொழும்பு - காலி - ஹம்பந்தோட்ட வீதியின் புணரமைக்கப்பட்ட பகுதிக்கு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 552 மில்லியன் கிரயத்தில் புதிய உருப்படிகள் அறிமுகப்படுத்தக்கட்டிருந்தன. இருப்பினும், மேலதிக வேலைகளிற்கான மாற்றல் கட்டளைகளிற்கான அனுமதி பெறப்பட்டிரக்காமை அரசாங்க பெறுகை வழிகாட்டியின் 8.13.4 ம் பந்தியுடன் உடன்படாமல் காணப்பட்டது.

(ஆ) கொழும்பு - காலி - ஹம்பாந்தோட்ட வீதிப்பகுதிகளின் புனர்நிர்மதனத்தில் ஈடுபட்டிருந்த உப்பந்ததாரர்களிற்கு செய்யப்பட்டிருந்த கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 295.93 மில்லியன் தொகையான தாமத கட்டணங்கள் இறுதி பட்டியலிற்காக தீர்ப்பனவின் போது விடுவிக்கப்பட்டிருறந்தது. இருப்பினும், அதற்கான காரணங்கள் கணக்காய்வின் போது விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், குறைபாட்டு நிபர்த்தி காலப்பகுதியின் போது குறைபாட்டை நிபர்த்தி செய்வதற்கான ஒப்பந்ததாரரின் பொறுப்பினை கவனத்தில் கொள்ளாது புனரமைக்கப்பட்ட பகுதிகளின் குறைபாடுகளை சரிசெய்ய மொத்தமாக ரூபா 5.67 மில்லியன் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பாதசாரிகள் கடப்பதற்கு பயன்படுத்துவதற்காக 2016 ஜூன் இல் ரூபா 186 மில்லியன் கிரயத்தில் பானந்துரையில் நிர்மானிக்கப்பட்ட மேம்பாலத்தின் நிர்மான வேலைகள் மற்றும் மின்தூக்கி முறைமையின் குறைபாடுகள் காரணமாக 2018 திசெம்பர் 31 வரை கூட மூடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 புறநடையான நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இணக்க தீர்வு சபையின் தீர்மானத்தின் பிரகாரம், ரூபா 68 மில்லியன் மேலதிக கொடுப்பனவு ஒப்பந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறியதன் காரணமாக ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், அதற்கு பொறுப்பான தரப்பினர்களை அடயாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர்களின் அலுவலகங்களின் செயற்பாடுகளிற்கு தேவையான மூலப்பொருட்கள் ரூபா 6.52 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தின் கீழ் வீதி புனர்நிர்மான வேலைகளிற்காக உடன்பட்டிருந்த ஒப்பந்ததாரரிகளினூடாக பெறுகை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.5 பயனற்ற சொத்துக்கள்

செயற்திட்டத்தினால் பெறுகை செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்த ரூபா 13.37 மில்லியன் பெறுமதியான குழாய்கள் மற்றும் துனைக்கருவிகளின் இருப்பு 03 வருடங்களிற்கு மேலாக நீர் கொழும்பு களஞ்சியத்தில் பயனற்றதாக காணப்பட்டது.